களுத்துறையில் சிங்கள - முஸ்லிம் கலவரம்!

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 03 இதழ் 129
யாழ்ப்பாணம் புதன்கிழமை 19 - 7 - 1995

மூவர் பலி; வீடுகள் எரிப்பு

(கொழும்பு)

களுத்துறையில் இடம் பெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரத்தில் மூவர் கொல்லப் பட்டனர் பலர் காயமடைந் தனர், பல வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டன.

களுத்துறையில் சிங்கள முஸ்லிம் இளைஞர்களுக்கி டையே நடந்த கிரிக்கெட் ஆட்ட முடிவில் ஏற்பட்ட கைகலப்பு மோதலாக வெடித் தது ஈற்றில் சிங்கள-முஸ்லிம் கலவரமாக மாறியது.

நேற்று முன்தினம் கிரிக் கெட் ஆட்ட முடிவில் வாய்த் தர்க்கமாக ஆரம்பித்து பின்

(6ம் பக்கம் பார்க்க)

சீருடையில் கொழும்பில் நடமாட புலிகள் திட்டம்

(கொழும்பு)

இராணுவச் சீருடையுடன், இராணுவத்தினர் பயன்படுத் துவது போன்ற அதே வடி வமைப்புடைய வாகனங்களில் விடுதலைப் புலிகள் கொழும்பு வீதிகளில் நடமாடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக 'லங்கா தீப்' பத்திரிகை தெரிவித்துள் ளது.

இராணுவம் மோன்று வேடம் தரித்துவந்து கொழும் பில் அடுத்த சில நாட்களில்

(2ம பக்கம் பார்க்க)

★ ஈழத்தில் நடைபெறுவது விடுதலைப் போர்

உலகநாடுகள் தமிழீழத்தை அங்கீகரிக்க முன்வரவேண்டும்!

டாக்டர் ராமதாஸ் கோரிக்கை

(லண்டன்)

ஈழத்தில் நடைபெறுவது விடுதலைப் போர். ஆகவே உலக நாடுகள் தமிழீழத்தை அங்கீகரிக்க முன்வரவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்று பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடபகுதியில் இலங்கை இராணுவம் நடத்தும் முயற்சியைத் தாக்குதல் நிறுத்தப்படவேண்டும்; விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை

(6-ம் பக்கம் பார்க்க)

'சண்டே லீடர்' செய்தியாளர் வவுனியாவில் கைது!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் 'சண்டே லீடர்' பத்திரிகையாளர் ஒரு வர் யாழ்ப்பாணம் செல்லும் வழியில் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

'சண்டே லீடர்' செய்தி யாளரான செல்வி பேன் தேவ நாயகம் என்ற பெண் பத்திரி கையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்

(2ம் பக்கம் பார்க்க)

இராணுவ தாக்குதலை கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி ஆர்ப்பாட்டம்

(சென்னை)

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் மேற் கொள்ளும் தாக்குதல்களை கண்டித்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகம்முன் நேற்று பாட்டாளி மக்கள் கட்சி மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்களும் மற்றும் தோழமைக் கட்சிகளும் கலந்து கொண்டன.

பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் ஆரம்பமான இவ்வூர்வலத்தில், இலங்கை அரசின் தமிழர் மீதான தாக்குதல்களை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட் டன.

(2ம் பக்கம் பார்க்க)

வவுனியா குண்டு வெடிப்பு மூன்று ராணுவம் காயம்

(கொழும்பு)

வவுனியாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பமொன் றில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்ததாக தெரிவிக் கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட் டுப் பகுதியிலே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றதாக தெரியவருகிறது.

இச்செய்தி பற்றிய மேலதிக விபரங்கள் எதுவும் கிடைக்க வில்லை. -ரி

வடபகுதியில் அடுத்த வாரம் மீண்டும் ஒரு ராணுவ நடவடிக்கை

படையினர் தயார் நிலையில்

(கொழும்பு)

வடபகுதியில் அடுத்தவாரம் மீண்டும் ஒரு ராணுவ நட வடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கில் அடுத்த வாரம் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்கு தற்பொழுது படையினர் ஆயத்தம் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உட்பட முழு வடமராட்சியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே தமது தற்போதைய இராணுவ நடவடிக்கையின் நோக்கம்; அதற்காக துருப்

(6ம் பக்கம் பார்க்க)

வரி செலுத்துவோருக்கு சிறப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களை நடத்து வதற்கு வருவாய்ப் பகுதி ஏற்பாடுகள் செய்துள்ளது; கீழ் காணும் விபரப்படி நடை பெற உள்ள இச் சிறப்புக் கூட்டங்களுக்கு அவ்வப்பகுதி களைச் சேர்ந்த வரிசெலுட்பட்ட வாணிப உரிமையாளர்களை தத்தமது வரி ஆவணத்துடன்

(2-ம் பக்கம் பார்க்க)

வலிகாமம் மேற்கு நேற்று வழமைக்கு திரும்பியது!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பகுதி நேற்று வழமைக்கு திரும்பி யது;

பண்டத்தரிப்பு, சித்தங் கேணி, தொட்டிலடி, மாகி யப்பிட்டி, வட்டுக்கோட்டை சங்கரத்தை, பண்ணாகம், சுழிபுரம், அராலி, மூளாய், பொன்னாலை, சங்கானை, சண் டிலிப்பாய் போன்ற பகுதி களை சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி

(2ம்பக்கம் பார்க்க)

கடற்படைக்கு புதிய கப்பல்கள் கொள்வனவுக்கு உடன்ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைக்கு மேலும் சில புதிய கப்பல்களை வாங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக 'ஐல ண்ட்' பத்திரிகை தெரிவித் துள்ளது.

இக்கப்பல்களை உடனடியா கக் கொள்வனவு செய்வதற் கான அவசர ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் இப்பத் திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தாக்கு தல்களிலுள், கடற்படை தம் வசமுள்ள யுத்தக் கப்பல்களை அடுத்தடுத்து இழந்து வரு வதையடுத்தே, கப்பல் கொள் வனவுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடற்படை அதிகாரிகளின் வேண்டுகோளை அடுத்தே இக் கப்பல் கொள்வனவுக்கு ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

இறப்பை பதிவு செய்ய அரச அதிபர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த 09 -ம் திகதி ஆரம் பிக்கப்பட்ட இராணுவ நட வடிக்கை காரணமாக மரணமானவர்களின் இறப்பை உடனடியாகப் பதிவு செய்வதற் கான நடவடிக்கைகள் அரச அதிபரினால் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மரணமாணவர்களின் உற

(6ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

புரொய்லர் கோழிகளும், பன்றியும், பன்றிக் குட்டிகளும் விற்பனைக்குண்டு. அண்ணாபாம், இணுவில். (ஏ-5111)

பொம்மனேரியன் நாய்க் குட்டி விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ராஜன்ஸ் 69, 4-ம் குறுக்குத் தெரு, சின்னக்கடை, குருநகர். (சி-1559)

புலமைப் பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் தேர்வுக்கான விஞ்ஞ பத்திரம் 1, விஞ்ஞ பத்திரம் 2க்குரிய "பொது விவேகம், பொதறிவு" வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய யுத்தகசாலை, யாழ்ப்பாணம். எ-5077

வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கழிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1533)

தேவை

வெற்றுஜாம் (JAM) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட். 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். [ஏ-5115]

தேங்காய் விலை அதிகரிப்பு

(வட்டுக்கோட்டை)

சாவகச்சேரிப் பகுதியில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் எட்டு ரூபா விற்கப்பட்ட தேங்காய் ஒன்று நேற்று முன்தினம் முதல் பதினைந்து ரூபாவாக உயர்ந்திருப்பதாக அங்கிருந்து வருவோர் தெரிவித்தனர்.

முன்னர் இடம்பெயர்ந்தோரில் அதிகமானோர் சாவகச்சேரியில் தஞ்சமடைந்திருந்தமையாலேயே தேங்காயின் விலை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. -139

உயிருடன் இருக்கிறார்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மேற்கு கண்ணகை அம்மன் கோவிலடியை சேர்ந்த திருமதி மகாலிங்கம் புக்காரா தாக்குதலில் பலியானதாக வெளிவந்த செய்தி தவறாகும். அவர் தற்போது உயிருடனிருப்பதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். -சி

யாருடையது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றின் வளாகத்தினுள் சிறிவர்களுக்கான மோதிரமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது எனவே உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி மன்றில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

கிராமவாசிகளின் சடலங்களே உடவளவையில்மீட்கப்பட்டன

(தொடும்பு)

உடவளவை பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ள ஏழு சடலங்களும் இப்பகுதிக்கு அயலில் உள்ள கிராம வாசிகளினுடையது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் எழுவரும் கண்டதுண்டமாக வெட்டிக் கொலைப்பட்டதன்பின்னர் வீதியில் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி பொலிஸார் தொடர்ந்தும் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். கி-சி

இராணுவச் சிப்பாயின் இலக்கதகடுகண்டுபிடிப்பு

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் சிரணிச் சந்திக்கு அருகாமையில்உள்ள "வசந்த வாசா" என்னும் இல்லத்தில் இராணுவ சிப்பாயான சிரிரகுமார என்பவரது எஸ். 306238 என்னும் இலக்கத்தகடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வீட்டுக்காரர் வீட்டுக்குச் சென்றபோது அங்கு இத்தகட்டினைக் கண்டெடுத்ததாகத் தெரிவித்தார்

புலிப்பாய்ச்சலின்போது புலிகளால் கொல்லப்பட்ட சிப்பாயின் இலக்கத்தகடே இது வென கருதப்படுகிறது. -139-சி

படையினரால் மதில்கள் தரைமட்டமாக்கப்பட்டன

[வட்டுக்கோட்டை]

சண்டிலிப்பாய் சிரணிச் சந்தியில் உள்ள அரிசி ஆலையின் சுவரை படையினர் புல்டோசரினால் இடித்து வீழ்த்தியுள்ளனர்.

இந்த அரிசி ஆலையின் மதில் ஓரமாக புல்டோசர் சென்ற அடையாளம் இப்பொழுதும் தெரிகிறது.

இப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் தமது பாதுகாப்பு கருதி மதில்களை இடித்து வீழ்த்தியதுடன் வீட்டு வேலிகளையும் தீயிட்டுக் கொளுத்தியுமுள்ளனர். 139-சி

அகண்டநாம பிரார்த்தனையும் மகாவேள்வியும்

தமிழர் துயர் தீரவும் தாயக மண்மீட்சிக்கு போராடும் எம்மவர்களின் வீரமும் வெற்றியும் ஓங்கிடவும்

அகண்டநாம பிரார்த்தனையும் மகாவேள்வியும்

சாவகச்சேரி பெரியமாவடி வித்தகம் எனும் பிரார்த்தனை மண்டபத்தில் தமிழ் ஆனி 32 ம் நாள் ஞாயிறு [16-7-95] காலை 7.00 மணி தொடக்கம் ஆடி 7-ம் நாள் [23-07-95] வரையும் இடைவிடாது தொடர்ந்து அகண்ட நாம பிரார்த்தனை நடைபெறும்.

அதில் அன்பர்கள் பங்குகொண்டு அனர்த்தங்களும், அழிவுகளும் தீர ஆண்டவனை வேண்டிட வாரீர்.

எம் அவனியை மீட்டிடப் பாரீர்;
குரு அருள் பெற்று குவலயம் வாழ்க.
சுவாமிகளின் அருளாணையின் வண்ணம்

வித்தகச் செல்வர்கள்

வித்தகம்
திருநீலகண்ட இளைஞர்
சைவ அபிவிருத்திச் சபை
பெரிய மாவடி, சாவகச்சேரி. [சி-1560]

வலிகாமம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளனர்.

மக்கள் தமது வீடுகள் குளோரின் போட்டு கழுவி சுத்தம் செய்தனர் இராணுவத்தினர் பொதுமக்களில் வீடுகளுக்குள் சென்று அசுத்தம் செய்துவிட்டு சென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு நேற்று கணிசமான ஊழியர்கள் சமுகமளித்தனர்.

இப்பிரதேச செயலகத்தின் யன்னல் கண்ணாடிகள் என்பனவற்றை இராணுவத்தினர் உடைத்துவிட்டு சென்றுள்ளனர்.

[170-162-ரி]

சண்டே லீடர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் செல்ல வந்த இவரை இராணுவத்தினர் விசாரித்த போது, தாம் ஓர் ஆசிரியை என்றும், யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினரிடம் செல்வதாகவும் தெரிவித்தாராம்

சந்தேகத்தின்பேரில் இவரைத் தொடர்ந்து விசாரித்த போது, இவர் 'சண்டே லீடர்' செய்தியாளர் என்பது தெரிய வந்ததாம். மேலதிக விசாரணைக்காக இவர் தற்பொழுது வவுனியாப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்று வவுனியா உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்தப் பெண் பத்திரிகையாளர், அண்மைக் காலமாகச் 'சண்டே லீடரில்' தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செய்திகளையும், கட்டுரைகளையும் எழுதி வந்தது குறிப்பிடத்தக்கது. மரி

இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சென்னையிலுள்ள இலங்கை தூதரகம் முன்னால் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் இலங்கை தூதரக அதிகாரிகளிடம் மகஜர் ஒன்று மேற்படி கட்சியினால் ஒப்படைக்கப்பட்டது. கே-ரி

வரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நேரத்திற்கு தயவு செய்து சமுகமளிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் கேட்டுள்ளனர்.

வலிகாமம்

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உ. அ. அ. பிரிவுகள் 23 ம் திகதி [ஞாயிறு] மு. ப 10 30 மணிக்கு குமாரசாமி மண்டபம், யாழ் இந்துக்கல்லூரி.

தென்மராட்சி

தென்மராட்சி பச்சிலைப் பள்ளி உ. அ. அ. பிரிவுகள் 23 ம் திகதி [ஞாயிறு] பி. ப 3.00 மணிக்கு நீர்வேலிக்கல்லூரி, சாவகச்சேரி.

வடமராட்சி

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவுகள் 24 ம் திகதி [திங்கள்] பி. ப 3.00 மணிக்கு மத்திய கல்லூரி, நெல்லியடி.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

உடுப்பிட்டிக் கிளை

ஸ்ரீலங்கா அரசின் தமிழ் இன அழிப்பாக மேற்கொள்ளப்பட்ட

"ஒப்பரேசன் லீப் போவேட்"

நடவடிக்கையில் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட அதிபர்கள், ஆறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள், 75க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு எமது

இதய அஞ்சலிகள்

ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் இன அழிப்பில் இருந்து மக்களைக் காக்கும் போரில் வீரச்சாவடைந்த தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளுக்கும், போராட்டத்தின்பால், அநியாயமாக உயிரிழந்த பொதுமக்களுக்கும் எமது சங்கத்தின் உடுப்பிட்டிக் கிளையின் இதய அஞ்சலிகளைத் தெரிவித்து அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

செயற்குழு,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
17-7-1995 உடுப்பிட்டிக் கிளை. [ஏ-5114]

தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தமிழீழ பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரர்கள், 1995-07-25ந் திகதி வரை தமிழீழ காவல்துறை பழைய பூங்கா அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும். ஆண்/பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

01. உப பரிசோதகர் தரம்.

1. வயது : 18 — 35 வரை
2. கல்வித் தகைமை : க. பொ. த. (சாதாரண தரத்தில்) 6 பாடங்கள்; தமிழ், கணிதம் / எண்கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி அல்லது க. பொ. த. (உயர் தரம்).
3. உயரம் : 5' 6''.

02. காவலர் தரம்.

1. வயது : 18 — 35 வரை
2. கல்வித் தகைமை : க. பொ. த. (சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் / எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
3. உயரம் : 5' 6''

பா. நடேசன்,
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

[ஏ 5116]

சிருடையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் பெரும் சேதம் விளைவிக்கக்கூடிய குண்டு வெடிப்புக்களை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இப்பத்திரிகை தெரிவித்திருக்கிறது. கி ரி

அறிவித்தல்

யாழ் பல்கலைக்கழகம் தனது நாளாந்தக் கடமைகளை ஆற்றத்தொடங்கியுள்ளதால் பல்கலைக்கழகசகலஉத்தியோகத்தர்களும் நாளை தொடக்கம் வேலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்
1995-07-18
எ-5113

மணிவாக்கு

ஒரு மனிதனின் அழிவுக்கு பொறுமை முக்கிய காரணமாகி விடுகின்றது. மற்றவர்கள் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்துப் பொறுத்துக்கொள் முடியாத குணம் அது. இந்தக்குணம் ஒருவரிடம் இருந்துவிட்டால் அவர் பெற்றுள்ள கல்வி அறிவையும் ஆன்மீக சாதனைகளையும் அதுசெயலற்றதாக்கி விடும்.

கௌதமதர்ம சூத்திரம்

நமது நோக்கு

பின்னோக்கிப் பாய்தல்

வடபகுதியின் சில பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு முன்னேறிய படையினரை விடுதலைப் புலிகள் விரட்டியடித்ததை ஜீரணிக்க முடியாத மருமகளும் மாமனும் அவர்களது அரசும் தமது தோல்வியை ஏற்றுக்கொள்ளாது சிங்கள மக்களிடமிருந்து மூடிமறைக்க எத்தனித்தாலும் உண்மை மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கியுள்ளது. மறைப்பதற்குக் காரணம் தமது திறமையின்மையையும் பல இராணுவ உயரதிகாரிகள் தமது பட்டறிவுகளின் அடிப்படையில் வழங்கிய ஆலோசனைகளை நிராகரித்தமையும் வெளிவந்துவிடும் என்ற பீதியேயாகும். ''விடுதலைப் புலிகள் எதிரிகளை புறமுதுகு காட்டி ஓட விரட்டி விட்டு இடம்பெயர்ந்த பொதுமக்களை தங்களது சொந்த இடங்களுக்குச் செல்லுமாறு பகிரங்கமாக வேண்டியுள்ள பின்னரும் அரசு தனது தோல்வியை மறைப்பது குழந்தைப்பிள்ளைத் தனமாகும். பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிப்பது போன்ற விடயம்.'' இந்த மறைப்புக்கு வேறு ஆழமான காரணம் ஏதும் உண்டோ என்றும் சந்தேகிக்க இடமுண்டு அரசு நடந்துகொண்ட விதத்தை படையினரில் பெரும்பகுதினர் குறைகூறி ஒத்துழையாமையில் ஈடுபட்டுள்ளனரோ என்றும் சந்தேகிக்க இடமுண்டு. உண்மையான தளநிலமைகளை தமதுபட்டறிவுமூலம் விளக்கியதை ஏற்றுக்கொள்ளாது தட்டிக் கழித்து தனக்குச் சாதகமான ஆமாம் போடும் இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு கொடுத்து அவர்கள் தலைமையில் படுதோல்வியை தழுவிய இத்தாக்குதலை நடாத்தியது பெரும்பான்மையான படையினர் மத்தியில் தங்கள் உயிர்களை பகடைக்காயாக வைத்து முறையான யுத்த தந்திரோபாயத்தை உயயோகிக்காத அரசியல் இராணுவத் தலைமைகளுக்கு எதிராக பெரும் பான்மையான படையினர் கிளர்ந்தெழவும் கூடும்.

சிங்கள மக்கள் அரசின் பொய்களையும் மூடி மறைப்புக்களையும் நம்பவில்லை என்பது சிறிலங்கா இராணுவத்தால் தினசரி கொழும்பில் கூட்டப்படும் பத்திரிகையாளர் மகாநாட்டில் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்திலிருந்துவரும் தகவல்களுக்கும் இராணுவம் வெளியிடும் தகவல்களுக்குமிடையில் பலத்த முரண்பாடு இருப்பதாகவும் ஆகவே தம்மை யாழ்ப்பாணம் சென்று தகவல்களை நேரடியாக சேகரிப்பதற்கு அரசு அனுமதி வழங்கவேண்டுமென்று தங்கள் அதிருப்தியை வெளியிட்டதில் இருந்து தெரியவருகிறது.

இதில் இன்னொரு விசேட அம்சமென்னவென்றால் தற்போது தோல்வியில் நடந்து முடிந்தபோருக்கு ''முன்னேறிப் பாய்தல்'' என்று பெயர் வழங்கப்பட்டமையாகும் இந்தப் பதத்தை நவசீனாவின் காலஞ்சென்ற தலைவர் மாஒசேதுங் அவர்கள் உள்ளூர் விவசாய உற்பத்தியை முன்னெடுப்பதற்கு உபயோகித்தார். ஒருநன்மையான முற்போக்கான அந்நிய நாடுகளின் திட்டங்களைப் பின்பற்றாது தாமாகவே சுயமாக விவசாயத்தில் முன்னேறுவதற்காகவே அவர் அந்தப் பெயரைச் சூட்டினார். அத்தகைய பெயரை ஒரு இன ஒழிப்பு ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு வைத்தது சீனாவையும் அதன் மறைந்த பெரும் தலைவரையும் அவமதிக்கும் செயலாகவே கருதப்படவேண்டும். அந்தப் பெயருக்கு இழுக்காறு ஏற்படும் வகையில் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கைக்கு வந்த படையினர் ''பின்னோக்கிப் பாய்தல்'' நடவடிக்கையை செயல்முறைப் படுத்தினர்.

ஹங்கேரியில் மரணமான தமிழரின் சடலங்கள் அழுகியதால் இனங்காண்பதில் சிரமம்

(புடாபெஸ்ற்)

ஹங்கேரியில் மரணமான தமிழர்களை அடையாளம் காண்பதற்கு வெளிவவிகார அமைச்சு ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவர்கள் அனைவரும் தமிழர்களென சந்தேகிக்கப்படுகிறது.

ஜெர்மனிக்குள் நுழையும் நோக்கில் ஹங்கேரி வழியாக இழுவை டிரக் வண்டியொன்றில் மறைந்துசென்ற இலங்கையர்களில் 18பேர்மூச்சுத்திணறி இறந்துள்ளனர் இச்சம்பவம் பற்றி முழுமையான தகவல்களை பெறுமாறு ஹங்கேரியிலுள்ள கௌரவ தூதரக ஆலோசகருக்கு இலங்கை வெளிநாட்டு அமைச்சு ஏற்கனவே உத்தரவு அனுப்பியுள்ளது.

இந்த சடலங்கள் அழுகிய நிலையில் இருப்பதால் அடையாளம் காண்பது சிரமமாக இருப்பதாக ஹங்கேரியபொலிசார் தெரிவித்திருப்பதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை தூதரக ஆலோசகர்கள் நேற்று ஹங்கேரிய தலைநகருக்கு சென்று பொலிஸ் காவலில் உள்ள ஏனைய 19 இலங்கையர்களிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொண்டனர்.

இது சம்பந்தமான தகவல்கள் கிடைத்ததும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேசமயம் பல்கேரிய பொலிசார் இவர்களை ஏற்றி வந்த டிரக் வண்டியின் சாரதியை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்த நபர் சட்ட விரோதமாக இலங்கை தமிழர்களை கடத்தும் நடவடிக்கையில் பல முறை ஈடுபட்டு வந்தவர் என அறிய வந்துள்ளது.

இந்தப் பயணத்துக்காக ஒவ்வொருவரிடமிருந்தும் 800 டொலர்கள் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கைதுசெய்யப்பட்டு ஹங்கேரியில் பொலிஸில் இருக்கும் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. -கே-கி

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் கோடிக்கணக்கில் பண மோசடி

[கொழும்பு]

மகாவலி அபிவிருத்தித்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும் மோசடி ஒன்று தற்பொழுது அம்பலத்திற்கு வந்துள்ளது.

இதன்படி 369 கோடி ரூபா பெறுமதியான ஒப்பந்தமொன்றுக்குரிய கொடுப்பனவாக 615 கோடிரூபா வழங்கப்பட்டு பெரும் மோசடி செய்யப்பட்டுள்ளதாக நேற்றைய 'தினமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் அமெரிக்க நிறுவனமொன்றுடன் செய்யப்பட்டதாகும். இந்த பெரும் மோசடியில் முன்னாள் அரசியல் வாதிகள் சிலர் சம்பந்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

மகாவலி அபிவிருத்திக்கு பெருமளவு வெளிநாட்டு உதவி பெறப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கி-சி)

ஆயிரக்கணக்கில் மக்கள் இருப்பிடங்களை நோக்கி விரைவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்-வடக்கு, மேற்கு பகுதிகளில் இருந்து ராணுவம் முற்று முழுதாக துரத்தியடிக்கப்பட்டதை அடுத்து அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று மூட்டைமுடிச்சுக்களுடன் வீதி வழியே சாரி சாரி தமது இருப்பிடங்களை நோக்கிச் சென்றனர்.

சண்டிலிப்பாய், சங்கானை, தொட்டிலடி, மாகியப்பிட்டி, அராலி, வட்டுக்கோட்டை, மூளாய், பொன்னாலை, திருவடிநிலை ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் கால் நடையாகவும், மாட்டு வண்டிகள், சைக்கிள்கள் மற்றும் வேறு வாகனங்களிலும் தமது இருப்பிடங்களை நோக்கிப் படையெடுத்துச் செல்கின்றனர்.

யாழ். நகர் மற்றும் தென்மராட்சிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருந்த மக்கள் வலி-மேற்குப் பகுதிக்குச்செல்லலாம் என்ற தகவல் கிடைத்ததை அடுத்து தத்தம் இருப்பிடங்கள் நோக்கி நேற்றுக் காலை முதல் சென்றவண்ணமுள்ளனர். -170-சி

கோவில்கள் அழிக்கப்படுவதைத் தடுக்க உலக இந்து சமய பாதுகாப்பு அமைப்பை உருவாக்க வேண்டும்

[கொழும்புத்துறை]

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையால் இந்துக் கோயில்களும், இந்துசமய நிறுவனங்களும் தாக்கி அழிக்கப்படுவதை தடுக்கும் முகமாக 'உலக இந்து சமய பாதுகாப்பு அமைப்பை' உருவாக்க முன்வர வேண்டும் என யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை கேட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசினால் பௌத்த சமயத்துக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பும், வழிபாட்டு உரிமைகளும் இலங்கையில் இந்து சமயத்தவர்களும் பெற்றுக்கொள்ள முயல்வது ஒவ்வொரு இந்து சமயத்தவர்களதும் தலையாய கடமையாகும்.

இதன்பொருட்டு சகல இந்து சமய நிறுவனங்களும் ஒன்றிணைந்து உலக இந்து சமய பாதுகாப்பு அமைப்பை உருவாக்கி செயற்பட வேண்டியது இக்காலத்தின் தேவையாகும் எனவும் இந்து இளைஞர்பேரவை அறிவித்துள்ளது.

இதேநேரம் சித்தன்கேணி சிவன்கோவில், வட்டுகோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி கோயில், நவாலி ஸ்ரீமுருகன் கோயில் உட்பட பல ஆலயங்கள் இராணுவ நடவடிக்கை, குண்டு வீச்சு மற்றும் ஷெல் தாக்குதலினால் சேதமடைந்ததையும் இந்து இளைஞர் பேரவை கண்டித்துள்ளது. 154-ர-சி

சுன்னாகம் வங்கியும் ஷெல் வீச்சில் சேதம்

(வட்டுக்கோட்டை)

பலாலியில் இருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்களினால் சுன்னாகம் சந்தைப் பகுதியில் உள்ள மேல்மாடிக் கட்டடங்கள் பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இங்குள்ள மேல்மாடிக் கட்டங்கள் ஒன்றில் இயங்கி வந்த சுன்னாகம் மக்கள் வங்கியும் பெரும் சேதத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் பகுதியில் புக்காரா மேற்கொண்ட கடுமையான தாக்குதலினால் பல வீடுகளும், கடைகளும் பலத்த சேதமடைந்துள்ளன. (139-சி)

அழுகிப்போன சடலங்களை மக்கள் எரியூட்டி வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய், சங்கானை, அளவெட்டி, மாகியப்பிட்டி, பகுதிகளில் தாங்கமுடியாத துர் நாற்றம் வீசுவதாக அவ்விடங்களுக்குச் சென்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

ஷெல் தாக்குதலினால் இறந்து போனவர்களின் உடல்கள் அழுகிய நிலையில் காணப்படுகிறது. வீதிகள் வயல்வெளிகளில் கால்நடைகள் ஏராளமாக இறந்து கிடக்கின்றன.

இப் பகுதிகளில் இராணுவத்தினரால் பல வீடுகள் உடைக்கப்பட்டிருப்பதுடன் மதில்கள் வேலிகள் அழிக்கப்பட்டுள்ளன. வீடுகளில் புகுந்த இராணுவத்தினர் பெறுமதி வாய்ந்த பொருட்கள் பலவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பல கோவில்கள் படையினரால் சேதமாக்கப்பட்டுள்ளன. பெருமளவு கோழிகள், ஆடுகள் படையினரால் கொல்லப்பட்டு இவ்விடங்களில் சமைத்துச் சாப்பிட்ட அடையாளங்களை காணக்கூடியதாயுள்ளது.

உருக்குலைந்த நிலையில் கிடக்கும் கடலங்கள் மற்றும் கால் நடைகளை இங்கு சென்றவர்கள் தீயிட்டுக் கொழுத்தி எரித்ததாகவும் பல இடங்களில் இன்னும் பல சடலங்கள் அழுகிப்போன நிலையில் கிடப்பதாகவும் தெரிவித்தனர். 162-சி

யூலை மாத ஓய்வூதியம் நாளை முதல் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த மாகோ கப்பலில் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான யூலை மாத ஓய்வூதிய வவுச்சர்கள் எடுத்துவரப்பட்டுள்ளது.

இவ் ஓய்வூதிய வவுச்சர்கள் தரம்பிரிக்கப்பட்டு இன்று 19ம் திகதி உரிய வங்கிகளில் சேர்க்கப்படும். ஓய்வூதியம் பெறுபவர்கள் நாளை 20-ம் திகதி வங்கிகளில் தமது ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் தங்கியிருக்கும் ஓய்வூதியர்களின் ஓய்வூதிய வவுச்சர்கள் அவர்கள் ஓய்வூதியம் பெறும் வங்கிகளில் நேரில் சேர்க்கப்படும். இடம் பெயர்ந்த மக்கள் நாளை 20ம் திகதி தமது வங்கிகளுக்குச் சென்று தமக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களைப் பெற்றுக் கொள்வதுடன் இவைகளைப் பணமாக உடனடியாக மாற்றிக்கொள்ளலாம் என்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் தெரிவித்தார். 162-கி

காயமடைந்த மேலும் மூவர் வைத்தியசாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு, மேற்குப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கடந்த 9ம் திகதி படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் இருவர் மரணமாயினர்.

தாவடியைச் சேர்ந்த வ. சிவபாக்கியம்-வயது 48 என்பவரும் நவாலி கிழக்கைச் சேர்ந்த முருகேசு செல்வரட்ணம் - வயது 65 என்பவரும், மரணமானார்கள்.

இதேவேளை அளவெட்டிப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்று இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து, யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் அங்கு மரணமானார்.

கடந்த திங்கள் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த செல்லையா மகாலிங்கம் - 38 வயது என்பவரே மரணமானவர். 90 கி

ஷெல் தாக்குதலினால் பல வீடுகள் சேதம்

(பண்டத்தரிப்பு)

இராணுவத்தினர் வலி-மேற்கு, வலி-தென்மேற்கு ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட சரமாரியான தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களினால் பல வீடுகளும் கட்டிடங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

வீதிகளிலும் ஷெல் விழுந்து வெடித்த இடங்கள் குழியாக காணப்பட்டன. மரங்களும் பல இடங்களில் கருகி முறிந்து கிடக்கின்றன.

சண்டிலிப்பாய் டச்சு வீதியில் ஜெகதீஸ்வரன் என்பவரின் வீட்டு கூரையில் ஷெல் விழுந்து வெடித்ததால் வீடு பலத்த சேதமடைந்துள்ளது.

இதேவேளை மக்கள் இடம் பெயர்ந்த வீடுகளில் திருடர்களும் சந்தர்ப்பத்தை பயன் படுத்தி தங்கள் கைவரிசையை காட்டி வருகின்றனர். -72-கி

சங்கானையில் 10 குடிசைகளை ராணுவம் தீக்கிரையாக்கியது

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் இடம் பெயர்ந்த பொதுமக்களின் பெருமளவு குடிசைகளை இராணுவத்தினர் தீ வைத்து கொளுத்தியுள்ளனர்.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து சங்கானை ஓடக் கரைபகுதியில் குடிசைகளை அமைத்து தங்கியிருந்த குடும்பங்களின் பத்து குடிசைகளை படையினர் தீ வைத்து கொளுத்திவிட்டு சென்றுள்ளனர்.

இப்பகுதிக்கு திரும்பிச் சென்ற மக்கள் குடிசைகள் தீ வைத்திருந்ததை தொடர்ந்து மீண்டும் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். -170-சி

இடம்பெயர்ந்தோர் வீடுகளில் நெல் மூடைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வலி-மேற்கு பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்த சமயம் வீடுகளில் இருந்து நெல்லு மூடைகளை சில விஷமிகள் திருடிச்சென்றுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்தோரின் வீடுகளுக்குள் புகுந்து திருட்டுக் கோஷ்டிகள் நெல்லு மூடைகளையும் ஏனைய தானிய வகைகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் விவசாயிகளுக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சில பகுதிகளில் விவசாய உபகரணங்களும் திருடப்பட்டுள்ளது. -170-சி

நிலுவையுடன் சம்பளம்

[குருநகர்]

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர் சேவைகளில் சேர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்குரிய 1995 ற்குரிய சம்பள நிலுவையுடன் இம்மாதச் சம்பளத்தை வழங்குமாறு யாழ். கல்வித் திணைக்களம் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் அறிவித்துள்ளது. -95-சி

தண்ணீர்கேட்டு துடிதுடித்திறந்தமகன் வீட்டு வளவில் எரித்த அவலம்

தந்தையின் பரிதாபம்

[யாழ்ப்பாணம்]

ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்து தண்ணீர் கேட்டு துடித்துக்கொண்டிருந்த மகனுக்கு தண்ணீர் கொண்டு வந்தபோது அவன் பரிதாபமாக உயிரிழந்துவிட்டான்.

இவ்வாறு அராலிப் பகுதியில் படையினரின் அகோர ஷெல் வீச்சால் உயிரிழந்த மகனின் சடலத்தை வீட்டு வளவிற்குள் எரித்துவிட்டு படுகாயமடைந்த மனைவியையும் மகளையும் பார்க்க யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்த வயோதிபத் தந்தை ஒருவர் அழுத வண்ணம் தெரிவித்தார்.

இச்சம்பவம்பற்றி அவர் மேலும் கூறுகையில்: கடந்த புதன்கிழமை நண்பகல் வீட்டினுள் இருந்தபோது அகோர ஷெல் வீச்சு அராலிப்பகுதி நோக்கி நடாத்தப்பட்டது. அப்போது வீட்டினுள் இருந்தவர்களை வளவில் நின்ற புளிய மரத்தின்கீழ் போய் பாதுகாப்பாக நிற்குமாறு கூறிவிட்டு நானும் அங்கு செல்ல முனைந்தேன்.

அப்போது அங்குநின்ற பனை மரம் ஒன்றில் மோதிவெடித்த ஷெல் நேராக புளியமரத்தின் கீழ் நின்ற எனது குடும்பத்தவர்களையும் ஏனையவர்களையும் கடுமையாகத் தாக்கியது. இதனால் எனது மகன், மனைவி, மகள் மற்றும் மூவர் அவ்விடத்திலேயே துடிதுடித்த வண்ணம் வீழ்ந்தனர். எவரைக் காப்பாற்றுவது யாரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வது என்று தெரியாது திகைத்தேன். அவ்வேளை தண்ணீர் தண்ணீர் எனக் கேட்டு மகன் துடிதுடித்துக் கொண்டிருந்தார். தண்ணீர் கொண்டு ஓடிவந்தபோது மகன் இறந்துவிட்டார். அவரது உடல்முழுவதும் இரத்த வெள்ளத்தில் கிடந்தது.

அதேபோல் அங்கு நின்ற ஏனைய இருவரும் அவ்விடத்திலேயே உயிரிழந்து கிடந்தனர். காயமடைந்தவர்களை ஒருவாறு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தேன். மகனின் சடலத்தை வீட்டு வளவினுள் கதறி அழுதவாறு எரியூட்டிவிட்டு வந்தேன். ஏனையவர்களின் சடலமும் உறவினரால் அவ்வாறு பின்னர் எரியூட்டப்பட்டது என்றார். சி

படைமுகாம்கள் மூடப்படுகின்றன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மேலும் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் அதிரடித்தாக்குதலையடுத்து இவை மூடப்பட்டுள்ளன. இவற்றிலிருந்த படையினர் பிரதான முகாங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக நேற்றைய 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (கி-சி)

இராசி பலன்

19-07-1995

புதன்கிழமை

[தமிழுக்கு ஆடி - 3]

ஸ்தமி: முற்பகல் 9-06 வரை, ரேவதி: பிற்பகல் 4-42 வரை, மரணயோகம், இராகுகாலம்: நண்பகல் 12-01 முதல் 1-31 வரை, சுபவேளை: மாலை 4-31 முதல் 6-01 வரை.

மேடம்: தொழில் அவதி, திருப்தியற்ற சூழ்நிலை, பணமுடை.

இடபம்: சுபகாரிய முயற்சி, கடமையுணர்வு, நண்பர் உதவி.

மிதுனம்: குடும்பமகிழ்ச்சி, தனநிறைவு, பயண நன்மை.

கடகம்: காரிய விக்கினம், வேலைக்கஷ்டம், எதிரிகள் பயம்.

சிங்கம்: பெரியோர் சுபவாதம், குடும்ப வேற்றுமை, அலைச்சல்.

கன்னி: புதிய வாய்ப்பு, தொழில் பெருமை, விருந்துபசாரம்.

துலாம்: காரியசித்தி, அதிகாரிகள் பாராட்டு, வாதத் திறமை.

விருச்சிகம்: தொழில் நஷ்டம், அவதூறு, மாமனார் பகை.

தனுசு: மனக்குழப்பம், தொழில் கஷ்டம், சிறுசங்கடம்.

மகரம்: அதிஷ்டவாய்ப்பு, பெண் உதவி, முயற்சி பலிதம்.

கும்பம்: கௌரவபாதிப்பு, குடும்ப கஷ்டம், மனவெறுப்பு.

மீனம்: தன்நிலை மறத்தல், ஏமாற்றம், தொழில் மந்தம்.

— ஜோஸ்யர்

இராணுவ சமபலத்தை புலிகள் நிரூபித்துள்ளனர்

'வெரித்தாஸ்' மதிப்பீடு

[மணிலா]

இலங்கை இராணுவத்துக்கு இணையான சமபலத்துடன் தாம் உள்ளதை விடுதலைப் புலிகள் தற்போது நிரூபித்துள்ளதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

இராணுவத்தின் யாழ்ப்பாண தாக்குதலில் இருபகுதியினருக்குமிடையேயான பலத்தை பரிசோதிக்கும் தளமாகவே அமைந்திருந்ததாகக் குறிப்பிட்ட 'வெரித்தாஸ்' யுத்த விமானமொன்றையும், போர்க்கப்பலொன்றையும் தகர்த்து விடுதலைப் புலிகள் தமது சமபலத்தை நிரூபித்துள்ளனர் எனவும் தெரிவித்தது. [கி-சி]

அகதி முகாம்களில் தொற்றுநோய் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களிடையே தொற்று நோய்கள் தோன்றியிருப்பது இனங்காணப்பட்டிருப்பதாக பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக் கழகத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கியுள்ளார்கள். இம்மக்களிடையே நெருப்புக்காய்ச்சல், கண்நோய், வயிற்றோட்டம், கூவைக்கட்டுப் போன்ற தொற்றுநோய்கள் பரவியிருப்பது இனங்காணப்பட்டுள்ளது. கண்நோயினால் 150 பேரும், வயிற்றோட்ட நோயினால் 15பேரும், கூவைக் கட்டு நோயினால் 6 பேரும், நெருப்புக்காய்ச்சல் நோயினால் ஒருவரும் பீடிக்கப்பட்டிருப்பது இனங்காணப்பட்டுள்ளது.

இந்நோய்கள் மேலும் பரவாவிடாது தடுப்பதற்கான தடுப்புநடவடிக்கைகளை யாழ் பல்கலைக் கழக சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருகிறார்கள். இம்முகாமில் தங்கியிருக்கும் 14 கர்ப்பிணித் தாய்மார்களில் 4 கர்ப்பிணித் தாய்மார்கள் பிரசவத்துக்காக யாழ். போதனாவைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். இங்கு ஒரு வயதுக்கு உட்பட்ட 54 குழந்தைகள் உள்ளனர். இவர்களுக்கான போஷாக்கு நிறைந்த பால்மா வழங்கப்பட்டுவருகிறது. [162-சி]

'மாகோ' கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

''மாகோ'' கப்பல் நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை துறைமுகம் வந்து பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இக்கப்பல் கங்கேசன் துறை கடற்பரப்பில் தரித்து நின்று கடற்படையினரின் சோதனை முடிவடைந்ததை அடுத்து கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகம் வந்து பொருள்களை இறக்கும் பணி நடைபெற்று வருகிறது. -170-சி

இராணுவம் அகன்ற பகுதிகளில் காயமடைந்தோர் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமம் வடக்கு, வலிகாமம்-மேற்குப் பகுதிகளில் காயமடைந்து வெளியேற முடியாத நிலையில் இருந்தவர்களில் ஆறு பேர் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சண்டிலிப்பாயில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த சிவசம்பு தனபாலசிங்கம் (வயது-72) இவரின் சகோதரி குமாரசிங்கம் நல்லம்மா (வயது-62), வி. நேசரட்னம் (வயது-70), சங்கானையில் இடம் பெற்ற ஷெல் தாக்குதலின் போது காயமடைந்த வல்லிபுரம் கனகராசா (வயது-35) மூளாயில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்த விஸ்வலிங்கம் வெற்றிவேல்நாதன் (வயது.45) சுன்னாகத்தில் இடம் பெற்ற ஷெல் வீச்சில் காயமடைந்த கந்தையா அமிர்தலிங்கம் (வயது.55) ஆகியோரே நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். -90.கி

பொன்னுலைப் பாலம்வரை படையினர் எம்மைபணயமாகபிடித்துச் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

மூளாய்-பொன்னுலைப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் அங்கிருந்து காரைநகருக்கு தப்பிச்செல்லும் போது பொதுமக்கள் பலரை பொன்னுலைப் பாலம் வரை பணயமாகப்பிடித்துச் சென்றுள்ளனர்.

இத்தகவலை படையினரால் பணயமாகவும், பாதுகாப்பு கேடயமாகவும் பிடித்துச்செல்லப்பட்ட இளம்பெண் ஒருவர் தெரிவித்துள்ளார். அவர் இது பற்றிமேலும் தெரிவிக்கையில்:

மூளாய்-பொன்னுலை உட்பட பல பகுதிகளையும் படையினர் ஆக்கிரமித்த வேளை நாம் வீடுகளினுள்ளே இருந்தோம். எமது அயலவர்கள் உறவினர்கள் பலர் அகோர ஷெல்லுக்கும், விமானதாக்குதலுக்கும் அஞ்சி வீடுகளை விட்டு வெளியேறிச் சென்று விட்டனர். மோசமான ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி நாம் வீடுகளை விட்டு வெளியேறவில்லை.

கடந்த புதன்கிழமைமூளாய் பிள்ளையார் கோவிலடி,மூளாய் ஆஸ்பத்திரி, பொன்னுலைப் பகுதிக்கு வந்த படையினர் வீடுகளிற்கு வந்து எம்மை எம்மை வெளியே வருமாறு மிரட்டினர். வெளியேவந்தபோது மூளாய் பிள்ளையார் கோவிலில் அனைவரையும் ஒன்று கூடுமாறு பணித்தனர். நூற்றுக்கு மேற்பட்டோர் வரை அங்கு கூடியிருந்தோம்;

தமிழ் குழுக்களும் வந்தன

இவ்வேளை அங்கு வந்த தமிழ்குழுக்களைச்சேர்ந்த இளைஞர்கள் எம்மை மிரட்டினர். யாழ்ப்பாணம் முழுவதையும் கைப்பற்றப் போவதாகவும் கூறினர். இயக்க அலுவலகங்கள் இருக்கும் இடங்களை பற்றி விசாரித்து அவற்றை காட்டுமாறும் கூறினர். அங்கு பெண்களும் சிறுவர்கள் சிறுமியரே அதிகம் இருந்ததால் நாங்கள் மறுத்து விட்டோம்.

பின்னர் சில மணிநேரத்தால் எம்மை வீடுகளில்சென்று இருக்குமாறு இராணுவத்தினர் கூறினர். நாங்களும் எமது வீடுகளுக்கு சென்று விட்டோம். வீட்டைப் பூட்டியவாறு உள்ளேயே இருந்தோம். வெளியே வரவில்லை. ஷெல், விமானத் தாக்குதல் பெரும் பீதியை எம் மத்தியில் ஏற்படுத்தியது. டாங்கிகள், கனரக வாகனங்கள் சகிதம் படையினர் அப்பகுதி எங்கும் ஓடித்திரிந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் எம்மை மூளாய் பிள்ளையார் கோவிலடிக்கு வருமாறு பணித்தனர். நாம் அங்கு சென்றபோது நூற்றுக்கணக்கான படையினர் பெருமளவு டாங்கிகள், வாகனங்கள் சகிதம் அங்கு நிலைகொண்டிருந்தனர். அவர்கள் பெரும் உயிராபத்துஒன்றிலிருந்து தப்பி வந்தவர்கள்போல் தென்பட்டனர். சிப்பாய்கள், அதிகாரிகளின் முகங்களில் பயப்பீதி தென்பட்டது;

வீதியோரத்தில் அமர்த்தினர்

எம்மை வீதியோரத்தில் அமர்ந்திருக்கப் பணித்தனர். அப்பகுதிக்கு சுளிபுரம், தொல்புரம் பகுதியூடாக பெருமளவு படையினர் வந்து குவிந்த வண்ணமிருந்தனர். ஏதோ பாரிய சம்பவம் நடந்துவிட்டதாக அஞ்சிய வண்ணமிருந்தோம். படையினர் அனைவரும் கடும் கோபத்துடன் காணப்பட்டனர். பல மணி நேரங்களின் பின் எம்மை வீடுகளுக்கு செல்ல அனுமதித்தனர்;

மீண்டும் நேற்று முன்தினம் தங்கள் காலை கோவிலடிக்கு வருமாறு கத்திக்கொண்டு வந்து கூப்பிட்டார்கள். உடனே அவ்விடத்திற்குச் செல்லுங்கள் என விரைவுபடுத்தினர்கள். அவர்கள் நின்ற நிலையை பார்த்து நாம் பயந்துவிட்டோம். கோயிலடிக்கு சென்ற எம்மை வீதியின் இருமருங்கிலும் இருக்கச் செய்தனர்.

அதிகாரிகள் மத்தியில் பரபரப்பு

அவ்விடம் முழுவதும் ஒரே பரபரப்பாக இருந்தது. அதிகாரிகள் பலர் ஜீப்களிலும், டிரக்குகளிலும் வருவதும், போவதுமாக இருந்தார்கள். பாரிய தாக்குதலொன்றை எதிர்கொள்வதற்கு தயாராவது போல அவர்கள் பெரும் பரபரப்புடன் நின்றனர்

அங்கு வந்த அதிகாரிகள் தமக்குள் குசு குசுத்தவண்ணமிருந்தனர். சிப்பாய்களும் தமக்குள் குசு குசுத்தவண்ணமிருந்தனர். புலிகள் பெரும் தாக்குதலை நடாத்த தயாராயிருப்பதாக அவர்கள் கதைத்தது ஓரளவு விளங்கியது. பெருமளவு புலிகள் தாக்குதலை நடாத்த வந்து கொண்டிருப்பதாகவும், அதற்குள் தப்பிவிட வேண்டுமென வும் அவர்கள் கூறிக்கொண்டிருந்தனர்.

அதிகாரிகள் மேலிட உத்தரவுக்காக காத்திருந்தனர். அவர்கள் மொறுமையிழந்து காணப்பட்டனர். பெருமளவு சிப்பாய்களை ஒவ்வொரு புறமும் அனுப்பிக்கொண்டிருந்தனர். நண்பகலுக்குப்பின் அப்பகுதி எங்கும் ஒரே பரபரப்பு. படையினர் பலரும் தங்களது மூட்டை முடிச்சுகளை ட்ரக்குகளில் ஏற்றத் தொடங்கினர். படை அதிகாரிகள் அவர்களை துரிதப்படுத்திக் கொண்டிருந்தனர். வேறு பகுதிகளில் இருந்தும் அங்கு படையினர் வந்து சேர்ந்தனர். அவர்கள் மத்தியில் அப்போது ஓரளவு நிம்மதி தெரிந்தது.

கேடயமாக பயன்படுத்தினர்

எம்மிடம் வந்த அதிகாரி எம்மை எழுந்து தங்களது வாகனங்களுக்கு முன்னாலும் பக்கம் பக்கமாகவும் பின்னாலும் வருமாறு பணித்துவிட்டு மூளாய் ஆஸ்பத்திரி நோக்கி செல்லத் தொடங்கினர். எம்மை தங்களுக்கு பாதுகாப்பாக பணயமாக கொண்டு செல்வதை உணர்ந்தோம். மூளாய் ஆஸ்பத்திரியடிக்குச் சென்று அங்கிருந்து பொன்னுலைச் சந்தி நோக்கிச் சென்றனர். 30 டாங்கிகளும், ட்ரக்குகள், ஜீப்புகள் என பெரும் தொடரணியுடன் பொன்னுலை சந்திக்கு சென்றடைந்தோம்.

பின்னர் எம்மை பொன்னுலை - காரைநகரை இணைக்கும் பொன்னுலைப் பாலத்தில் வரிசையாக நிறுத்திவிட்டு டாங்கிகள், வாகனங்களுடன் காரைநகரை நோக்கி மாலை 4 மணியளவில் நகரத் தொடங்கினர். காரைநகருக்குள் தாங்கள் போய்ச் சேரும் வரை எம்மை அசையக் கூடாதெனவும் தங்கள் உத்தரவை மீறினால் சுட்டுவிடுவோம் எனவும் எச்சரித்தனர். ஒருவாறு மூவாயிரத்துக்கும் கூடுதலான படையினரும் அவர்களது டாங்கிகளும் எம்மைத் தாண்டிப் பெருமளவு தூரம் சென்றதும் நாம் தப்பி வந்து விட்டோம் என்றார். சி

★ படையினரின் கொடூரத்தால்

விறகுகள்போல் அடுக்கப்பட்டு மனிதச் சடலங்கள் வந்தன

[திருநெல்வேலி]

குடாநாடே போர்க்கோலம் பூண்டுவிட்டது எதிரி போர் என பிரகடனம் செய்துவிட்ட நிலையில் மக்கள் தம்மை புலிகளுடன் இணைத்து செயற்பட வேண்டும். மக்கள் குருதிக் கொடை வழதகியும், உலர் உணவு வழங்கியும் பொது இடங்களிலும், இராணுவ முகாமை அண்டிய வீதிகளிலும் பதுங்கு குழிகளை அமைத்தும் உதவ வேண்டும்.

இவ்வாறு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. பாலகுமார் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

நவாலி தேவாலயம் மீதான தாக்குதலில் இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் உடனடியாக மருத்துவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்படாததாலேயே காயமுற்றநிலையில் மரணமானார்கள். சிலமணி நேரத்தின் பின்னரே இவர்கள் உழவு யந்திரத்தில் விறகு போல் ஏற்றிவரப்பட்டனர் எனவே எதிரியானவன் பொது மக்களை அழிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளான். நாம் இனியும் பொறுக்காது ஒன்றுபட்டு எதிரியை அழிக்க வேண்டும் என விடுதலைப் புலிகளின் பிரமுகர் பாலகுமார் தெரிவித்தார்.

இராணுவம் பின்வாங்கி ஓடிவிட்ட இடங்களிலும் வீடுகளிலும் வேலி ஓரங்களிலும் கிணறுகளினும் பிணவாடை வீசுகிறது. இராணுவ பிடிக்குள் அகப்பட்டபலர் இறந்திருக்கலாம். சிலஉடல்கள் எரிக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. நவாலிதாக்குதல் கொடூரமானது நினைத்துக் கூடபார்க்க முடியாதது. இறந்தவர்களது உறவினர், சடலங்களைத் தேடியதை கண்கொண்டுபார்க்க முடியாது என்றார். 157-சி

வெடிக்காத ஷெல்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் ஏவிய ஷெல் ஒன்று நவாலி சென் பிற்றேர்ஸ் தேவாலயத்துக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் வெடிக்காத நிலையில் இருந்ததை காணமுடிந்தது.

170-சி

அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன் கிழமை காலை 10.00 மணிக்கு சென் ஜோன்ஸ்அக்கடமியில் நடைபெறும்- சகல அதிபர்களையும் தவறுதலந்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பனிப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

திருட்டு

(பண்டத்தரிப்பு)

சங்கானையிலுள்ள பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உடை தயாரிப்பு நிலையம் உடைக்கப்பட்டு அதிலிருந்த சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க 'றெடிமேட்' சேர்ட்டுகள், மற்றும் உடுதுணிகள் யாவும் திருடப்பட்டுள்ளன. இது பற்றி சங்கானை காவல் துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

.72-சி

67 அகதி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

டது. இதேவேளை உறவினர்கள்,நண்பர்கள்வீடுகளில்தங்கியிருக்கும் அகதிகளுக்கு ஒருவாரத்திற்கான உலர் உணவு வழங்கப்பட்டது.எனவும் தெரிவித்தார். 162-சி

தேவாலய தாக்குதல்குறித்து பாப்பரசருக்குக் கடிதம்

(லண்டன்)

தேவாலயங்கள் மீதான இலங்கை படையினரின் தாக்குதல்கள் குறித்து லண்டன் லூசியன் நகர மேயர் சின்னமணி பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருள் சின்னப்பருக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

நவாலியில் சென்-பீற்றர்ஸ் ஆலயத்தின் மீது விமானாப் படை விமானம் குண்டு வீசித் தாக்கியது குறித்தும், இதனால் அவ்ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களில் பலர் கொல்லப்பட்டமை குறித்தும் இக்கடிதத்தில் மேயர் சின்னமணி விபரமாகக் குறிப்பிட்டுள்ளார். கி-சி

அடையாளம் காணப்படாத சடலங்கள் அடக்கம் செய்யப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்-வடக்கு, வலிகாமம் - மேற்குப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது உயிரிழந்து தேடுவாரற்ற நிலையில் கிடந்த சடலங்களில் ஒன்று நேற்று இனம் காணப்பட்டது.

சுழிபுரம் மேற்கில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயம் அடைந்து தேடுவாரற்ற நிலையிலிருந்த திருவடிநிலையைச் சேர்ந்த சபாபதி தேவராசா (வயது-16) என்ற இளைஞனே உயிரிழந்ததவராவார்.

இவரைத் தேடிச் சென்ற உறவினர், இவர் சடலமாகக் கிடப்பதைக் கண்டு அவ்விடத்திலேயே அடக்கம் செய்துவிட்டுத் திரும்பினர்.

இவ்வாறு அப்பகுதியில் தேடுவாரற்ற நிலையிலுள்ள சடலங்கள் தற்போது பொதுமக்களால் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

-90-கி

வித்தை புரிந்திடுவோம் வா

சங்கிலியன் மண்ணிலவர்
சிங்கநடை போடுவராம்
அங்கிருந்து ரத்வத்தை
அலறுகிறார்
பொங்கியினி—
செத்தை களைத்தட்டி
பெட்டிகளில் வைத்தனுப்பும்
வித்தை புரிந்திடுவோம்
வா!

—நிம்மதி

எருவாகி எழுந்து உருவாகு புலியாய்

நீதி நெறியற்று நிம்மதி கெடுவதுவா?
நாளும் துயரோடு நடைப்பிணமாய் வாழ்வதுவா?
மீதி இருக்குன்ற உணர்வை கொண்டு வா!
ஆதியில் நாம்பட்ட அடிமை விலங்கொடி
ஆதிக்க கோட்டைகளை அடியோடு தானிடி
போதி மரத்தடிப் பேய்களை போய்முடி;

கருமுகில் கலைந்து கிழ்வானில் சுதந்திரம்
உருவாகும் நேரம் உரமிடும் காலம் — நீ
உருவாகு புலியாய் ஈழமண் விடிவுக்கு
எருவாகி எழுந்திடு போர்க்களம் ஆடு — தமிழ்
நிருவாகம் நிலைக்கும் நிம்மதி பிறக்கும்
வருவாய் நீ வரும்பகை முடிக்க விரைவாய் நீ.

—உடுவில் சசிவர்ணன்

வெள்ளவத்தை கடற்கரையில் இளைஞரின் சடலம்

(கொழும்பு)

வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

30-வயது மதிக்கதக்க இவ் இளைஞரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

கடந்த வியாழக்கிழமை இச் சடலம் கடலில் மிதந்து வந்து கரையொதுங்கியதாகத்தெரிவிக்கப்பட்டது சடலம் பொரளைப்பொலிஸ் சவச்சாலையில் தற்பொழுது வைக்கப்பட்டுள்ளது. கி-கி

"யாழ். குடாநாணுவ நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும்"

சிங்கள பெண்கள் அமைப்பு கோரிக்கை

(தொழும்பு)

யாழ். குடாநாட்டில் மேற் கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று இலங்கைத் தாய்மார் புதல் வியர் அமைப்பு அரசை வலியுறுத்தியுள்ளது.

சிங்களப் பெண்களே பெரும் பான்மையாகக்கொண்டஇந்த அமைப்பில் 18 ஸ்தாபனங்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத் தக்கது.

யாழ். குடாநாட்டு நடவ டிக்கைகள்உடனடியாக நிறுத் தவேண்டும்; இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டும் எனவும் இராணுவத் தீர்வு பிரச்னையை தீர்க்கமுடி யாது எனவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இரு தரப்பின ரும் போரை நிறுத்தி சமா தானத்திற்கு வரவேண்டும்' என்றும் போர் உடனடியாக நிறுத்தப்பட்டு தீர்வுக்கான யோசனை முன்வைக்கப்பட வேண்டும் என்றும் கோரியிருப் பது குறிப்பிடத்தக்கது. கே ரி

இறுதி வீரவணக்கமும் நினைவுக்கல் நாட்டலும்

(யாழ்ப்பாணம்)

16. 07. 95ம் திகதியன்று அதிகாலை காங்கேசன்துறை துறைமுகத்துட் புகுந்து சிறி லங்கா கடற்படைக்குச் சொந்தமான பாரிய எட்ட வைக் கப்பலை தகர்த்தழித் தச் சாதனை புரிந்து வீரச் சாவைத் தழுவிக்கொண்ட, கடற் கரும்புலி. மேஜர் நிலூட்டன் பிரான்சிஸ் டக்ளஸ் 8/13, கடற்கரை வீதி, பாசை யூர், கடற் கரும்புலி. மேஜர் தங்கன் வீரையா மயில்வாக னம் லோபறித் தோட்டம், பதுளை. த.மு: மனேகரச் சந்தி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்., கடற்புலி. கப்டன் தாயகி மகாலிங்கம் ரஞ்சினிதேவி [ரஞ்சி] 8ம் வட்டாரம், வேலணை மேற்கு. த. மு: 9/7. பருத்தித்துறை வீதி. யாழ்., கடற்புலி கப்டன். கமலம் குழந்தை வேல் சிறீரஞ்சினி [பவா] பயிரிக்கடல், காரைநகர். த. மு: "முருகபதி", கொக் குவில் மேற்கு, கொக்குவில். [கடற் கரும்புலி அங்கையற் கண்ணி வீடு], கடற்புலி லெப். தவமலர் துரைசிங்கம் கேமாவதி. [இளவாசி] நவாலி றோட், மானிப்பாய். த. மு: காரைக்கால் வீதி, கோண்டாவில், கடற்புலி லெப். யாழரசி சின்னராசா அன்ரனிமாலா [சாந்தி] 16/1 மத்தியூஸ் வீதி. யாழ்ப்பா ணம்., கடற்புலி. 2-ம் லெப். மைவிழி யூக்கிஸ் டொறேற்ரு ஓடக்கரை வீதி, குருநகர் யாழ், கடற்புலி. கப்டன். விக்வன் ஏரம்பமூர்த்தி ஜீவா னந்தன் பெரிய நீரதீவு, மட்டுநகர். ஆகிய மாவீரர்க ளின் திருவுருவப் படங்கள் இன்று 19ம் திகதி பி. ப 3. 00 மணியளவில் குருநகர் ச. ச. நிலையத்தில் மக்களின் இறுதி வீர வணக்கத்திற்காக வைக்கப்பட்டு, அங்கு இறுதி வீர வணக்கக் கூட்டமும் நிறைவுற, அங்கிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளு டன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் எட்டு மாவீரர்களினதும் நினை வுகற்கள் நாட்டப்படும்.

வித்துடல் விதைப்பு

இதே சம்பவத்தில் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட: கடற் கரும்புலி கப்டன் தமிழினி சிவப்பிரகாசம் கனி மொழி [கனி] ஆதிகோவி லடி, வல்வெட்டித்துறை. கடற்புலி மகளிர் படையணிச் சிறப்புத் தளபதி லெப். கேணல் மாதவி திருநாவுக் கரசு கலைச்செல்வி இன்ப ருட்டி, அல்வாய் வடக்கு. கடற்புலி லெப். பூமதி கனக ரட்ணம் சாந்தினி கிழக்குத் தெரு, வல்வெட்டித் துறை. கடற்புலி 2-ம் லெப். நித்தியா மாரிமுத்து மஞ்சுளா மாங் குளம், த. மு: கரையூர், குடத்தனை., கடற்புலி லெப். சோபிதா தருமலிங்கம் மாலதி புனிதநகர், கற்கோவளம், பருத்தித்துறை. ஆகியோரின் திருவுருவப் படங்களும், கடற் புலி லெப். கேணல் நரேஸ்/ சந்திரன் சிவராசாசிங்கம் நவராசா திருமலை. த. மு: கல்லூரி வீதி பருத்தித்துறை. அவர்களின் வித்துடலும் நாளை 20ம் திகதி பி. ப 5.00 மணியளவில் நெல்லியடிச் சந்தியில் ஊர்தி வந்து சேர மக்களின் இறுதி வீரவணக் கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற, பூரண அணிவகுப்பு மரியாதைகளு டன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் ஐந்து மாவீரர்கள் நினைவுக் கற்கள் நாட்டப்பட்டும் வித் துடல் புனித விதைகுழியில் விதைக்கப்படும். -ரி

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி 2-30

ஞானதரனின்

முகங்கள்

(சமூகச்சித்திரம்)

தினசரி 4-30

கடற்கரும்புலிகளின் வீரசாதனை

உயிராயுதம் பகுதி III

தினசரி: 6-30

சனி, ஞாயிறு 10—30, 6—30

MILTON MORRIS

THE HARD WAY

(தாக்குதல் சித்திரம்)

(ஏ-5112)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவரிகளது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683617.

யாழ். மீதான தாக்குதல்

பி.பி.சி. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது

(லண்டன்)

யாழ்ப்பாணத்தில் தற்போ தைய நிலைமைகுறித்து நேற்று முன்தினம் லண்டன் பி பி ஸி தொலைக்காட்சி உலக சேவை யில் ஒளிபரப்பப்பட்டது.

கடந்த 9ம் திகதி வலிகா மம் மேற்கு, வடக்கு பகுதி களில் இராணுவத்தினர் மேற் கொண்ட இராணுவ நடவ டிக்கை பற்றியும் இத்தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட் டது.

இலங்கை இராணுவத்தினர் மேற்கொள்ளும் ஷெல் தாக்கு தல் காட்சியும் இதிதொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட் டது. ம-ரி

நீதிமன்ற அமர்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் தற் காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட வழக்கு நட வடிக்கைகள் மீண்டும் கடந்த 17ம் திகதி தொடக்கம் வழ மைபோல் நடைபெறுகின் றது. ரி

காவல்துறை பணிமனைகளில்

பாதிப்புற்றோர் விபரம் பதியக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் இடம் பெற்ற சிங்கள இராணுவத் தின் இராணுவ நடவடிக்கை யின் போது எமது மக்களிற்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம், காயமடைந்தோர், காண மற்போனோர், சொத்துக்கள், உடமைகள் சேதம், களவு சம்பந்தமான முறைப்பாடுகள் யாவும் சங்கானை, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதே சங்களில் அமைந்துள்ள காவல் பணிமனைகளில் பதிவு செய்து கொள்ளுமாறு பொது மக்களுக்கு தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் பா. நடேசன் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

சண்டிலிப்பாய், மாசியப் பிட்டி, சங்கானை, சித்தன் கேணி, சுழிபுரம், பண்ணாகம், வட்டுக்கோட்டை, அராலி, தொல்புரம், மூளாய், வடக் கம்பிராய், சங்கரத்தை, ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் சங்கானை காவல் பணி மனையிலும், அளவெட்டி, மல் லாகம், சுன்னாகம், தெல்லிப் பளை, உடுவில், கந்தரோடை ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் சுன்னாகம் காவல் பணி மனையிலும் ஆனைக்கோட்டை, மானிப்பாய், நவாலி போன்ற பிரதேசங்களில் உள்ள மக்கள் யாழ். காவல் பணிமனையிலும் தமது முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். -ரி

ஈழத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண வேண் டும். நடைபெறும் சண்டை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

இலங்கை இராணுவம் அப் பாவி தமிழர்களை படுகொலை செய்வதனை உலகநாடுகள் கண்டனம் செய்யவேண்டும். அங்கே நடைபெறுவது ஒரு விடுதலைப் போர் ஆகவே உலக நாடுகள்தமிழ் ஈழத்தை அங்கீகரிக்க முன்வரவேண்டும்

இதேவேளை வடக்கு தமிழர் கள் தாக்கப்பட்டு, இரத்தம் தேவையென அறிவித்திருப்ப தால் செஞ்சிலுவைச் சங்க மூலம் இரத்ததானம் செய்து அனுப்ப எமது தொண்டர் கள் முன்வந்திருக்கிறார்கள்.

மேலும் வைத்திய சிகிச்சை தேவைப்பட்டு அகதிகளாக வரும் தமிழ் மக்களுக்கு சிகிச்சை வசதிகளும் செய்ய தற்குவைத்தியகுழுவொன்றை ஏற்பாடு செய்யவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரி வித்தார். கே-ரி

கடற்படைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் வேகமாகச் செல் லக்கூடியதும், தாக்குதல்களின் போது சிறப்பாகச் செயற் படக்கூடியதுமான நவீன ரக கப்பல்களையே கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இக்கப்பல்கள் கொள்வன வுக்கான ஒப்பந்தம், வெளி நாட்டுக் கப்பல் கம்பனி ஒன் றுடன் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. கி ரி

களுத்துறையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைகலப்பிலும் மோதலிலும் முடிந்தது.

ஆத்திரம் கொண்ட கூட் டத்தினர் கடைகளையும் வீடு களையும் அடித்து நொறுக்கி னர் இதில் முஸ்லிம்களின் கடைகள், வீடுகள் சேதமுற் றன.

இதனை அடக்க பொலிசார் அங்கு வந்து துப்பாக்கி பிர யோகம் செய்ததில் அவ்விடத் திலேயே 3 பேர் பலியாகி பலர் காயமுற்றனர். படுகாய முற்ற 14 பேர் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். பொலிசாரும் தாக்கப் பட்டு காயமடைந்ததாக தெரி விக்கப்படுகிறது.

இச் சம்பவத்தினால் அப் பகுதியில் பதற்றம் நிலவுகி றது.

மீண்டும் கலகம் ஏற்படாதி ருக்கும் வகையில் விமானப் படையினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே முஸ்லிம் சிங்களவர் இன மோதல் பரவாமல் தடுக்க அப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் களை ஸ்தலத்திற்கு சென்று கவனிக்குமாறு ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்கா வேண் டுகோள் விடுத்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து உடன டியாக முழுவிசாரணை மேற் கொள்ளுமாறு ஜனதிபதி சந் திரிகா பொலிஸ் மா அதிபரை பணித்துள்ளார்.

இச்சம்பவத்தில் சம்பந்தப் பட்ட பொலிஸ் அதிகாரிக ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள் ளார். கே கி-ரி

நவாலியில் நேற்றும் இரு சடலங்கள் மீட்பு

[மானிப்பாய்]

நவாலியில் மேலும் இரண்டு சடலங்கள் இடி பாடுகளுக்கிடையிலிருந்து மீட்கப்பட்டன.

நவாலி சென் பீற்றேர்ஸ் தேவாலய பகுதியில் நேற்று மக்கள் இடிர்பாடுகளைத் துப்பரவாக்கியபோது அதற் குள் இரு பெண்களின் சட லம் அழுகிய நிலையில் இருக் கக் கண்டுபிடிக்கப்பட்டு அவ்விடத்தில் வைத்தே மக்களால் தீமூட்டி எரிக் கப்பட்டது. 90-170-71-ரி

வடபகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புகைகளை [தந்திரோபாயமாக நிலைநிறுத்தியுள்ளோம்' என வும் அவர் மேலும் தெரிவித் தார்.

முன்னேறிப் பாய்தல் நட வடிக்கையின்போது தாக்குத லில் ஈடுபட்ட பதினேயாயிரத் திற்கும் மேற்பட்ட இராணு வத்தினர் அடுத்தகட்ட தாக் குதலுக்கு தயாராக வடபகுதி முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத் தில் கைப்பற்றிய இடங்களை விட்டு படையினர் வெளியேற வில்லை என்றும் தந்திரோபா யம் கருதி படையினரி பின் வாங்கிவிட்டதாக கூறுவதில் உண்மையில்லை என்றும் அவர் கள் கைப்பற்றிய இடங்களை லிட்டு பின்வாங்கப்போதில்லை என்று பிரிகேடியர் சரத் முன சிங்க கொழும்பு மற்றும் சர்வ தேச செய்தியாளர்களுக்கு பொய்யான தகவல்களை வழங்கி வருவதும் குறிப்பிடத் தக்கது. கி-ரி

மீண்டும் விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மருத்துவக் கல்லூரி யில் நடைபெற்றுவந்த உதவி மருத்துர்களுக்கான பாடங் கள் யாவும் மீண்டும் எதிர் வரும் 25-ம் திகதி செவ் வாய்க்கிழமையிலிருந்து பழைய நேர அட்டவணையின் படி நடைபெறும் என அறி விக்கப்படுகிறது.

இறப்பை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வினர்கள் தமது பிரதேசக் செயலகத்தில் உரிய விண் ணப்பப்படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து தமது பிரிவு கிராம அலு வலரின் சிபார்சுடன் பிர தேசச் செயலரிடம் ஒப்ப டைக்குமாறு வேண்டப் படுகின்றார்கள்.

பிறப்பு இறப்பு பதிவாளர் கள் யாவரும் தமது பிரி விற்குரிய பிரதேசச் செயல ருடன் தொடர்புகொண்டு பிரதேசச் செயலாளரால் பெறப்பட்டு உறுதிப்படுத் தப்பட்ட பிரதிக்கினைப் பெற்று இறப்புக்களைப் பதிவு செய்து சான்றி தழ்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். -ரி

ஜனதிபதி, இறந்தோரின் குடும்பத்தினருக்கு தனது அனு தாபத்தினையும் தெரிவித்துள் ளார்.

பொலிஸாரின் நடவடிக்கை யைக் கண்டித்து களுத்துறை யில் முஸ்லிம் மக்கள் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ள னர். இந்த இளைஞர் கவ்சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து களுத்துறையில் அரசுக்கு எதி ரான நடவடிக்கைகளை தடுக் கும் நோக்குடன் அப்பகுதியில் விமானப்படையினர் பாது காப்பு கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். கே கி-ரி